RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s89

OPEN ACCESS

# கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இறைப்பற்று

த. ஜெயசீலி. [அ, *]

[அ] தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்-635601, தமிழ்நாடு, இந்தியா.

# The Devotion to God That the Christian Hymns Convey

D. Jeyaseeli [a, *]

[a] PG Research Department of Tamil, Sacred Heart College (Autonomous), Tirupattur–635601, Tamil Nadu, India

* Corresponding Author:
jeyaseelifma@gmail.com

Received: 28-04-2021
Revised: 05-05-2022
Accepted: 18-05-2022
Published: 20-07-2022

Check for updates

## ABSTRACT

Tamil is the best language to express devotion. Therefore, every believer should sing to God. They have created various literatures in Tamil to explain religious doctrines and express devotion. In this way, Citrilakiyankal with Christian messages have also appeared in Tamil. Christuva Citrilakiyankal sing the praises of the great Christian. They have appeared featuring Jesus' mother and father as the characters. The histories of the saints are also sung in chitrilakiyankal. Numerous chitrilakiyankal have appeared to quote biblical messages and explain Christian doctrines. The style of repenting of one’s faults, expressing devotion, and giving oneself to live a godly life is abundant in christuva Citrilakiyankal. They also play an important role in explaining that Jesus belongs to the Tamil soil and Tamil cultural traditions. Veeramamuni and Vedanayaka Shastri can be mentioned as pioneers of Christuva Citrilakiyankal. Both of them have made significant contributions to the Tamil language resources. Veeramamuni’s mother tongue is not Tamil. However, with great effort, he became a scholar in Tamil and did various Tamil works. He has created chitrilakiyankal such as Thirukkavalur Kalambakam, Githeriammal Ammanai and Annai Alungal Anthadi.

**Keywords:** Christian Literature, Jesus, Veeramamuni, Christian doctrines

## முன்னுரை

கிறித்தவ சிற்றிலக்கியங்கள் இயேசுநாதரின் ஒப்பற்ற அன்பையும், தூய்மையையும் எடுத்துக்கூறி கிறிஸ்துவைக் கண்டவர்கள் தூய்மையுடன் வாழவேண்டும் என எடுத்துச்சொல்கின்றன. எளிமை, இனிமை, வேகம், விறுவிறுப்பு ஒருங்கே கொண்டு யாவரும் புரிந்து கொள்ளும் வகையில் இயேசுநாதரை மீட்பராக, இரட்சகராக, சிலுவை நாதராக, ஒப்பற்ற இறைவனாக படைத்துக்காட்டுகின்றன. இயேசுவின் அன்னையையும், தந்தையையும் பாட்டுடைத்த லைவர்களாகக் கொண்டும், இறையடியார்களின் வரலாறுகளையும் விவிலியச் செய்திகளையும், கிறித்தவ கோட்டுபாடுகளையும் விளக்குகின்றன. தம்குறைகளுக்கு வருந்தி, பக்தியை வெளிப்படுத்தி, நிலையான வாழ்வை நல்க, இறையருளை வேண்டும் பாங்கும் பக்திச்சுவையும் கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் மிகுந்துள்ளது.

“அவனின்றி ஓர் அணுவும் அசையாது” என்று பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து செயல்களுக்கும் இறைவனே காரணகர்த்தா என நம்பி வாழ்பவன் தமிழன். இறைப்பற்று என்னும் தலைப்பானது எவ்வாறு கிறித்தவ சிற்றிலக்கியங்களில் கிறித்தவ சமய நம்பிக்கைகள் வெளிப்படுவதைப் பின்வரும் தலைப்புகளான இறைவனின் தன்மை, மனிதனின் குற்றத்தைப் போக்கி,

அருளும், நலமும் வளமும் தருபவர் இறைவன், எங்கும் நிறைந்திருப்பவன், உலகத்தையும், உயிரினங்களையும் படைத்தவன், இறையருளால் பாவம் மறையும், இறைவனே வீடுபேறு அளிக்கக்கூடியவர், பாவப்பரிகாரப்பலி இயேசு பெருமான், உண்மை வழிபாடு, அடைக்கல அன்னை இறைவனின் தாய், பாம்பின் தலையை நசுக்கியவள் இவற்றின் மூலம் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இறைவன் எங்கும் நிறைந்திருப்பவன்

இறைவன் தனக்கென்று ஒரு வடிவமில்லாது, முக்காலத்தையும் கடந்து, எங்கும் நிறைந்திருப்பவன். முடிவும், தோற்றமும், முடிவும் இல்லாது எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பவன். படைப்புக்களை உய்விக்கின்றவனாகவும், உயிர்களை பேணிக்காப்பவனாகவும் தமிழ்க்காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் இறைவனை சித்தரிக்கின்றன. இதனையே திருக்காவலூர் கலம்பகத்தில் வீரமாமுனிவர் பின்வருமாறு கூறுகின்றார்.

“தானாகத் தடங்காதாய் மேனாகத் தடங்காவார் தனையன்றாயோ

னோகத்தானாத் திழிந்துதவ வெழுந்துதவ வுரிமைகாட்டி

வானாகத்தேனாகத் திருவரங்க டருவரங்கே வந்தாரன்றோ

கானாகப் பூ நாகத் தரும்புதிரு விரும்புதிருக் காவலூரே”

மேலும் உலகமே கொள்ள முடியாத இறைவன், மனித உரு எடுத்து கன்னி மரியாளிடம் குழந்தையாகப் பிறந்தார் என்றும் மனிதனோடு உறவாட, உரிமைகொள்ள வார்த்தையாய், ஒளியாய் நின்றவர் மானிட மகனாக பிறந்து, உலகத்தை ஒளிர்விக்கின்றார் (Sundararasan, 2009). இவரை இதனையே திருவிவிலியம் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது.

## உலகத்தையும், உயிரினங்களையும் படைத்தவன் இறைவன்

“ஏதனில் நிலம் மீதுறும் செம்மண்ணால்

வனைந்து உருவாய் எனைப்படு

தீதறும் பழுது ஏதும் அற்றோரு

சேயாதாக வகுத்தவா”

ஞான நொண்டி என்னும் நூலில் ஆசிரியர் தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார் இறைவன் எவ்வாறு ஏதோன் என்ற அழகான உலகத்தையும், அம்மண்ணிலிருந்து தன்னையும் ஒரு பழுது இல்லாமல் தனது குழந்தையாகப் படைத்தார் என இப்பாடலில் வருணனை செய்கின்றார் (Kumariseliyan, 2018). இதனையே திருவிவிலியம் படைப்பின் தோற்றத்தை இவ்வாறு விவரிக்கின்றது.

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவமற்று வெறுமையாக இருந்தது. கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் வளர்வன யாவற்றையும் அவ்வற்றின் இனத்தின் படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

உலகை உயிரினங்களை வார்த்தையால் படைத்த இறைவன் மனிதனை தனது சாயலாகப் படைத்து, தனது உயிர் மூச்சினை ஊதி அனைத்து நலன்களாலும், அறிவினாலும் அருளினாலும் நிரப்பினார். அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊதி, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான், கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார். இவ்வுண்மையை தனது பாடலில் ஞான நொண்டி என்னும் நூலில் எடுத்துரைக்கின்றார்.தன்னைப்படைத்த இறைவனை நினைத்து மகிழ்கின்றார்.

## அருள் பெற அடைக்கல அன்னையிடம் தஞ்சம் புகுதல்

இயேசு பெருமானை பெற்றெடுத்த அடைக்கல அன்னையை நாடி அவள் திருவடி பணிந்தால் நாம் அருளும், வளமும், நலமும் பெறலாம். என்பதை,

"சுடர் முடியாத யோர் குடையு ணீயின்ற தோன்றற்

படர்முடியார் வந்து பணிந்தர - ரிடர்முடியா

நின்றுணர்வார் காவலூ ரெய்திப் பணியாரோ

குன்று மெனக் கொண்ட கோது"

இப்பாடலின் வழியே, பெத்லேகமில் மாட்டுத் தொழுவத்தில் தீவனத் தொட்டிலில் கிடத்தியிருந்த இறைமகனைக்கண்டு, வணங்கி, அருளைப்பெற, நாடு கடந்து, பொன்னும், போளும், தூபமும் ஏந்தியவர்களாய் மூன்று ஞானிகள் காணிக்கைகளை அர்ப்பணித்தனர் (Sundararasan, 2009). அத்தகைய தெய்வீகக் குழந்தையை கையில் ஏந்தியவளாய் திருக்காவலூரில் குடிகொண்டிருக்கும் அன்னையை வணங்கிப் போற்றிடவும், மறைப்பொருளாக விளங்குகின்ற இறைவனை உலகிற்குஅளித்த தாய்மையை வணங்கிடவும் அனைவரையும் அழைப்பதாக,

"மறையரு ளிறைவனை மறைவில் வருளினை

இறையருள் கதியினை யினிதரு டுணையினை"

இப்பாடல் வரிகள் கூறுகின்றது (Sundararasan, 2009).

## இறையருளால் பாவம் மறையும்

"ஞானநொண்டி நாடகம்" என்னும் சிற்றிலக்கியத்தில் ஆசிரயர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் அவர்கள் மனுக்குலத்தை "ஞான நொண்டியாக சித்திரிக்கின்றார். ஞானநொண்டி மேடையில் தோன்றும் போது கையில் பல ஆயுதங்களை தாங்கியவனாய், மாவீரனைப் போன்று உடையுடுத்தி அரங்கில் வந்து ஆடுகிறான். பாவச்செயல்களுக்கும், தீய வாழ்க்கைக்கும், சமுதாயத்தை கெடுக்கும் கேடுற்ற பல செயல்களுக்கு உதவிய கைகளும், கால்களும், புண்ணியங்கள் செய்வதற்கு உதவாமல் போனதை நினைத்து வருந்தினாலும், கன்னிமரியாளின் மாசற்ற திருமகன் இயேசுவின் கல்வாரிப்பலியில் சிந்தப்பட்ட இரத்தத்தினால் தான் மீண்டும் கை, கால்களை பெற்று விட்டதாகவும், இனி தன்னை யாரும், எத்தகைய பாவச் சோதனையும் முடமாக்க முடியாது என்னும் உறுதியை அனைவருக்கும் தெரிவிப்பதாக அவனது தோற்ற வருணனை உள்ளது.

"போகட்டும் லோகத்தின் துட்டங்கைகால்

புண்ணியத்துக்கு உதவாமறபோன தெந்தனட்டம்

தோகைமரி ஈன்றதே திட்டம் நொண்டி

தொந்தோம் என்றாடிக்கொள்ளத் தூயங்கட்டினாளே"

இயேசு குற்றங்களையும் பாவங்களையும் மன்னிக்கின்றார் (Kumariseliyan, 2018). பாவத்தின் மூலம் இறைவனிடம் இருந்து விலகி வாழ்ந்த மானுடம் இப்பொழுது இயேசு கிறிஸ்துவோடு இணைந்து, அவரது இரத்தத்தின் மூலம் அருகில் கொண்டு வரப்பட்டுள்ளது. பாவம் அழிக்கப்பட்டது, வாழ்வருளப்பட்டது. இது மனித செயல் அன்று மாறாக கடவுளின் கொடையாகும்.

## இறைவனே வீடுபேறு அளிக்கக்கூடியவர்

இந்த அழகிய உலகினையும், மனித உயிர்களையும் படைத்த இறைவனே, மனிதனுக்கு வீடுபேறு அளிக்கக்கூடியவர் என்பதை

“தேவனுக்குத் தேவனான ஈசன் மாந்தர்

செய்து வைக்குந் தெய்வமெல்லாங் கைகுவிக்கும் ஈசன்

மூவுலகெலாந்துதிக்கும் ஈசன் எந்தன்

முன்னின்று காத்தெனக்கு முக்தி தரும் ஈசன்”

ஞான நொண்டி தன்னைப்போல் பல்வேறு மாந்தர்கள் பாவத்தில் வீழ்ந்து உடல் உறுப்புகளை இழந்த அனைவரையும் மீட்க மகிமையில் ஆராதனையும், புகழ்ச்சியினையும் பெறக்கூடிய இறைஇயேசு கடவுள் தன்மையை துறந்து, மாட்டுத் தொழுவத்தில் தோன்றினார் (Kumariseliyan, 2018). அரசுகளுக்கெல்லாம் அரசரான இயேசு கழுதை வாகனத்தில் மிகவும் எளிமையான அரசராக பவனி வருகிறார். ஒரு சொல்லாலே நோய்களையும், பேய்களையும் போக்கினார். இறந்தவர்களை உயிர்ப்பித்தார். புதுமைகள் பல புரிந்தார். சீடர்களின் பாதம் கழுவினார். சிலுவைச் சாவினை ஏற்றார் தன்னைப் பலியாக்கி மனிதன் இழந்த வீடுபேற்றினைத் தந்தார். மோட்ச வாசலை திறப்பவரும் வான் வீட்டில் இடமளிப்பவரும் இயேசு கிறிஸ்துவே ஆவார்.

## பாவப்பரிகாரப்பலி இயேசு பெருமான்

இதோ உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறி ஆட்டுக்குட்டி என திருவிவிலியத்தில் குறிப்பிடப்படும் இறைமகன் இயேசுவை என்பதை,

“அன்புடனே மனமகிழ்ந்து

ஏசையரிடம் போனேன்

தொய்யும் வினை காணேன்

அவரிகு கால் கவனமாகப்

பவ மறயான் பிடித்தேன்”

கல்வாரியில் கண்டு அவரது பாதங்களைப் பிடித்த நிமிடத்திலேயே தனது பாவங்கள் கழுவப்பட மீண்டும் கை, கால்கள் பெற்றதாகக் கூறி மகிழ்வதாக இப்பாடல் அமைந்துள்ளது (Kumariseliyan, 2018). இயேசுவின் இரத்தம், பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தமாகும்.

## உண்மை வழிபாடு

‘ஆசையே துன்பதிற்கு காரணம்’ புத்தர் இவரின் கூற்றினை உலகமே ஏற்கின்றது. இதனை பல நூற்றாண்டுகளுக்கு முன்பே உணர்ந்த கித்தேரி என்னும் கிறித்தவ சிறுமி தனது தோழிகளுக்கு நிலையாமையைப்பற்றி அறிவுரை கூறுகின்றாள். என்பதை,

“ஆசைமுதற் பல்வினையே அற்றொழிப்பப் போர் குறித்துப்

பூசை முதற் கொண்டிறைஞ்சிப் பூங்குழலார் தேறியன்றே”

ஆசையை விட்டொழித்து இறைவனை மனதில் நினைத்து தியானிக்கும் பொழுது நமது பாவங்கள் மறைந்து, தீமையை எதிர்த்துப் போராடக்கூடிய வலிமையை பெறுவோம் என்கிறாள் (Sundararasan, 2015). இங்கு உண்மை வழிபாடு என்பது ஆசையை அறவே விட்டொழித்து இறைவனை வணங்குவது தான். மேலும்,

“நிலை கொள்ள வாழ்விதென நின்றாசை கொள்ளதால்

அலைகொண்டு உயிர்தளம்பல் ஆடியநல் ஊசலதே”

இப்பாடலில் உலகம் நிலையற்றது என தெரிந்தாலும் ஆசை கொண்ட மனது அதன்மேல் அதிகம் பற்றுகொண்டு விரைந்தோடுகின்றது. இதனை மேற்கொள்ள, செய்த பாவச்செயலுக்கு வருத்தம்

கொண்டு இறைவனை நோக்குவதே நல்ல மனதிற்கும், வாழ்விற்கும் அடையாளம் என்ற கருத்தினை வலுப்படுத்துகிறாள் கித்தேரியம்மாள் (Sundararasan, 2015).

## அடைக்கல அன்னை இறைவனின் தாய்

இறைமகனை உலகிற்கு கொடையாக வழங்கிய அடைக்கல அன்னை நமக்காக இறைவனிடம் மன்றாடி அருள் வரங்களை மழையாகப் பொழிய திருகாவலூரில் எழுந்தருளியுள்ளார்.அவளது திருவடியை வணங்கி நலம் பெறுவோம் என ஆசிரியர் அழைக்கின்றார்.

"உந்தையை யீன்றுநீ யொருவற் கீங்கரும்

வந்தையோ டன்னையு மகளு மாயினை"

வானதூதர் மரியாளிடம், தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும் (Sundararasan, 2015). உம்மிடம் பிறக்கப்போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் என்று கூறுவதன் மூலம் அடைக்கல அன்னை இறைவனின் தாய் என்பது வெளிப்படுகின்றது.

## பாம்பின் தலையை நசுக்கியவள்

சமுதாயத்தை சீரழித்துக் கொண்டிருக்கும் மூடப்பழக்க வழக்கங்கள், குற்றங்கள், பழிச்சொற்கள், வெறுப்புணர்வு, பகைமை, கொலை, கொள்ளை மற்றும் எல்லா வகையான துன்பத்திற்கும் காரணமான பாம்பின் தலையை நசுக்கியவள் திருக்காவலூரில் எழுந்தருளியுள்ளாள். இதனை,

"அரவம்பட வெழுந்தாளாகம் படுத்து

மரவம் படச்சீறடியா - ளரவத்தாற்

பாவலகும் பேருலகும் பாவனையாத் தானணுகி

நே ரொழியுங்காவலூர் நீர்"

இறைவனால் வாக்களிப்பட்ட பெண்ணாக அடைக்கல அன்னையை திருவிவிலியம் கூறுகின்றது. பாவம் என்னும் துன்பத்தின் தலையை நசுக்க இறைவனால் உலகிற்கு அருளப்பட்டவள் அடைக்கல அன்னை.அவள் பாதம் நாடுவோர்க்கு எவ்வித துன்பமும் அணுகாது (Sundararasan, 2009). சமுதாயம் பல்வேறு பாவக்கட்டுகளிலிருந்து விடுபட அன்னையை நாடுதல் வேண்டும்.

## முடிவுரை

காமம், வெகுளி, மயக்கம் என்னும் தீமைகள் நெருங்கா வண்ணம் காத்து நிற்கின்ற மெய், வாய், கண், மூக்கு, செவி போன்ற ஐம்பொறிகளையும் நேரிய வழியில் செலுத்துவது இறைப்பற்று ஒன்றே! தன்னையும், தலைவனாகிய இறைவனையும் உணருவதும், ஒரு வாழ்வின் பொழுதுகள் அனைத்தும் இறைவனை நோக்கியதாக இட்டுச் செல்வதும் இறைநம்பிக்கையே. மனிதர்கள் மீது அன்பு பொழியும் இதயத்தை இயேசுபிரான் தானே வந்து ஏற்றுக் கொள்கின்றார். தூய இதயத்தோடும் உறுதியான நம்பிக்கையோடு தன்னைச் சரணடைபவர்களை ஆண்டவர் எந்நிலையிலும் கைவிடமாட்டார். அன்போடு இறைவனை நம்புவோரை அவர் என்றும் உடனிருந்து காக்கின்றார். ஆன்மீகமும் உலகியலும் இணைந்தாக மனித வாழ்க்கை அமையவேண்டும். ஆன்மீகம் இல்லாத உலகியல் சாவுக்குச் சமமாகும். இறைவனிடம் பற்றுக்கொள்ளாவிடில் துன்பமே வரும். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். அறத்தை ஆடையாகவும், நீதியைத் தமது வாழ்வின் பாதையாகவும், இறையச்சத்திலும், இறைப்பற்றுறுதியிலும் நிலைத்து நிற்பதன் மூலம் வாழ்வில் வெற்றிடையலாம். தமிழ் மொழியே இறைவனால் அருளப்பட்ட தெய்வீக மொழி என தமிழன் கருவறை முதல் கல்லறை வரை ஒவ்வொரு நிகழ்விலும், காலக்கட்டத்திலும் இறைவனின் வல்லமையை, செயல்பாட்டினை அனுபவித்ததனால் இறைவனை முதலில் தொழுத பின்னரே

அனைத்து செயல்களையும் தொடங்கினான். இன்றளவும் தமிழ் சமூகமானது இறை நம்பிக்கையில் வேரூன்றி இறைவனின் பிரசன்னத்தை அனைத்திலும் உணர்வதால் எச்செயலும் இறைவழியாட்டுடனும், இறைவனைப் புகழ்ந்தும், வணங்கியும் தொடங்குதல் எப்போதுமே வெற்றியையும், மனநிறைவினையும் தரும். காப்பியங்களும், காவியங்களும் இறைவைனுக்கு அர்ப்பணமாகியே எழுதவும், பாடவும் படுகின்றன.

## References

Kumariseliyan, (2018) Gnana Nondi Natakam, Saradha Pathippagam, Chennai, India.

Sundararasan, S., (2009) Thirukavaloor Kalambagam, Mulai Nilaiyam, Chennai, India.

Sundararasan, S., (2015) Kitheriyammal Ammaanai, Mulai Nilaiyam, Chennai, India.

Sundararasan, S., (2009) Bethlegam Kuravanchi, Mulai Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License